**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.2/2023**
**Prosecution Witness P.W.2**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கார்த்திகேயன் | Calling | : போர்மேன் |
| Father's name | : திரு. வீரணன் | Religion | : இந்து |
| Village | : தே.கல்லுப்பட்டி | Age | : 55 |
| Taluk | : பேரையூர், மதுரை | | |

நாள் **- 24.09.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது டி.கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் போர்மேனாக டி.கல்லுப்பட்டியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.08.2018ம் தேதியன்று மாலை சுமார் 6.10 மணியளவில் நான் என்னுடைய பணியை முடித்துவிட்டு, ஊருக்கு திரும்பி கொண்டிருந்த போது சிவகுளம் கண்மாய் அருகே கரும்பாண்டி காட்டு அருகே ஒரு டிப்பர் லாரி மின்கம்பத்தில் மோதி மூன்று மின்கம்பங்களும், வயர்களும் சேதம் அடைந்தது. மேற்படி மின்கம்பங்களும், வயர்களும் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு சொந்தமானது. அந்த வண்டியின் பதிவு எண்.TN63BB7571 ஆகும். மேற்படி டிப்பர் லாரியின் பின்புறம் தூக்கி நின்று கொண்டிருந்தது. ஆஜர் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார் நான் பார்த்தேன். சேதத்தின் மதிப்பு ரூ.58,000/- இருக்கும். இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாகவோ, நான் அவரை பார்த்ததாகவோ சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்த சம்பவம் எனக்கு ஒரு ஆட்டோ டிரைவர் சொல்லி தான் தெரியும் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் நிர்வாகம் சார்ந்த

ஊழியர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் எதிரியை காவல்துறையினர் சொல்லி அதனடிப்படையில் அடையாளம் காண்பித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.25 10:08:34 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.